**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 5ம்பிரதிவாதி ஆஜர். 2 முதல் 4, 6 முதல் 9, 14 முதல் 17 மற்றும் 20 பிரதிவதிகள் ஆஜர் இல்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.2,3,4,5,14,1620, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.6,7,8,9 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.4– தினேஷ்குமார் த/பெ சண்முகம்

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை :–</u>

1. வாதி என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் தகப்பனார் என்றால் சரிதான். என் தாயார் பெயர் சிவகாமி. என் தாயாருக்கும் மற்றும் தகப்பனாருக்கும் 1991ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் சரிதான். நான் 1992ம் வருடம் பிறந்தேன். வாதி 1996ம் வருடம் பிறந்தார். என்னுடைய தாய், தந்தையருக்கு கருத்து வேறுபாட்டால் என் தாயார் விவகாரத்து 2007ம் வருடம் பெற்றார்.

2. தாவா சொத்து பிரிவு ஏற்படாத கூட்டு குடும்பசொத்து என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு 1/12 பங்கு உள்ளது. வாதிக்கும் 1/12 பங்கு உள்ளது. தகப்பனாருக்கும் 1/12 பங்கு உள்ளது. தாவா சொத்தை பொறுத்து நிரந்தர பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. 1 முதல் 4 பிரதிாவதிகள் சேர்ந்து ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணங்களில் நானும், வாதியும் தரப்பினர்கள் இல்லை.

3. அந்த கிரைய ஆவணங்கள் என்னையும், வாதியையும் கட்டுப்படுத்தாது. தாவா சொத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 1/12ல் பங்கு பாகத்தை பொறுத்து ஒரு முதல் தீர்ப்பாணை பிறப்பிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

2,3,4,20,6 முதல் 9,14,16 மற்றும் 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.